# செய்திகளும் குறிப்புகளும்

**19.12.2024, ஆரோவில்வாசிகளுக்கான தமிழ் வார ஏடு, ஆரோட்ரடுக்ஷன், எண்: 1087**

---

**ஸ்ரீ அரவிந்தர் - மனித சக்கரம்** (Human cycle) 477

**20. பகுத்தறிவு வளைமுகட்டின் முடிவு**

ஒரு மதவியலான அமைப்புமுறை, மற்றும் ஒரு பரந்துவிரிந்த நம்பிக்கை ஆசார அனுஷ்டானங்கள் உடைய உளப்பாங்கைக் கூட்டினாலும் சமுதாய உய்வுக்கான வழிவகை இன்னும் காணப்படவில்லை. இவை அனைத்தையும் சமுதாயம் வளர்த்துள்ளது, ஆனால் அவற்றுள் ஒன்றும் அதை மருட்சி நீக்கம், சோர்வு மற்றும் சிதைவிலிருந்து காத்துவிடவில்லை. ஐரோப்பாவின் பண்டைய பகுத்தறிவான பண்பாடுகள் பிளவுபடுத்தும் ஐயப்பாடுகளிலும் ஐயுறவுவாதச் செயலாற்றலின்மையிலும் (Sceptic impotence) முடிந்தன, ஆசியாவின் ஆசார அநுஷ்டானங்கள் தேக்கத்திலும் தேய்விலும் முடிந்தன. நவீன சமுதாயம் உய்வுக்கான ஒரு புதிய தத்துவத்தை கண்டுபிடித்துள்ளது. அதுதான் முன்னேற்றம் என்னும் கருத்து -எப்பொழுதும் ஓர் அதிக அறிவு, அதிகக் கருவிகள், அதிக வாழ்க்கை நலன்கள் மற்றும் வசதிகள், அதிக இன்பநுகர்வு, ஒரு பெரிய மற்றும் இன்னும் பெரிய சமுதாயப் பொருளாதாரச் சிக்கல், ஒரு மேன்மேலும் அதிகரித்த கையாளமுடியாத செல்வவளமிக்க வாழ்க்கை, இதுவே அதன் குறிக்கோள் என்று வைத்துக்கொண்டாலன்றி அது அந்த முன்னேற்றத்திற்கான குறிக்கோளை ஒருபோதும் காணமுடியவில்லை. ஆனால் இவை எல்லாம் இறுதியில் பழையன எங்கே இட்டுச் சென்றனவோ அங்கேயே நிச்சயமாக இட்டுச் செல்லும், ஏனென்றால் இவையும் பெரிய அளவிலான அவையேதான். அவை ஒரு வட்டத்தில் வழிநடத்திச் செல்கின்றன அதாவது ஓரிடத்திற்கும் செல்வதில்லை; அவை பிறப்பு, வளர்ச்சி, தேய்வு, அழிவு ஆகிய வட்டத்திலிருந்து தப்புவதில்லை, அவை அமரத்துவத்தின் தத்துவமாகிய இடையறாத ஆன்மீகப் புதுப்பித்தல் மூலம் தன்னை நீடித்துக்கொள்ளும் இரகசியத்தை உண்மையிலேயே காண்பதில்லை, ஆனால் ஒரு தொடரியலான பரிசோதனைகள் மூலம் ஒரு கணம் மட்டுமே மருட்சியால் கண்டுணர்வதைப் போல் காண்கிறது, ஆனால் இந்தப் பரிசோதனை ஒவ்வொன்றும் ஏமாற்றத்தில் முடிகிறது. அதுதான் இதுவரை, நவீனகால முன்னேற்றத்தின் இயல்பாக இருந்துவந்துள்ளது. அதனுடைய புதிய உள்நோக்கிய திருப்பத்தில் மட்டுமே, இப்போதுதான் ஆரம்பமாகத் தொடங்கியிருக்கும் ஒரு பெரியதான அகவுணர்வு நோக்கிய திருப்பத்தில் மட்டுமே, ஓரளவு நம்பிக்கை வைக்க இடமளிக்கிறது; ஏனென்றால் அந்தத் திருப்பத்தால் மனிதனுடைய மெய்ம்மூலமான உண்மை அவனுடைய ஆன்மாவில்தான் காணப்படும் என்பதைக் கண்டுபிடிக்கலாம். ஓர் அகவுணர்வுக் காலம் நம்மை அங்கே இட்டுச் செல்லும் என்பதும் நிச்சயமன்று, ஆனால் அது சரியாகப் பயன்படுத்தப்பட்டால், நம்மை மிகவும் உட்புறம் நோக்கிய இயக்கத்தில், சரியான திசையில் திருப்பும் சாத்தியம் உள்ளது.

இது ஒரு பழைய கண்டுபிடிப்பு மற்றும் பண்டைய சமுதாயங்களை இது மதம் எனும் பெயரால் ஆண்டது என்று கூறப்படலாம். ஆனால் அது ஒரு தோற்றம்தான், இந்தக் கண்டுபிடிப்பு இருந்தது, அது தனிமனிதனின் வாழ்க்கைக்காக மட்டுமே படைக்கப்பட்டிருந்தது அவனுக்குக்கூட அவனுக்குரிய அதனுடைய நிறைவேற்றத்திற்குப் புவியுலகத்திற்கு அப்பால் நோக்கியது, மேலும் புவியுலகை அவனுடைய உய்வு அல்லது வாழ்க்கைச் சுமையிலிருந்து விடுபட ஆயத்தம் செய்யும் இடமாக மட்டுமே நோக்கியது. மனித சமுதாயம் தானும் ஆன்மாவைக் கண்டுணர்வதை அதனுடைய சொந்த ஜீவனின் விதிமுறையைக் கண்டறியும் வழிவகையாக உணரவில்லை, அது ஆன்மாவின் உண்மையான இயற்கை மற்றும் தேவை மற்றும் நிறைவேற்றம் பற்றிய ஓர் அறிவை இத்தரையுலகின் முழுமைக்குச் சரியான வழியாக ஒருபோதும் பற்றவில்லை. நாம் பண்டை மதங்களை, அவற்றின் தனிமனித நோக்கு நீங்கலாக, சமுதாய நோக்கில் பார்த்தால், அவற்றை சமுதாயம் அவற்றின் ஆன்மீகமேயல்லாத அல்லது எப்படியிருந்த போதிலும், அவற்றின் குறைவான ஆன்மீகமான பகுதிகளை மட்டுமே பயன்படுத்தியது என்பதைப் பார்க்கலாம். சமுதாயம் அவற்றைத் தன்னுடைய பேரெண்ணிக்கையிலான வழக்காறுகள் மற்றும் அமைப்புகளுக்கு ஒரு கம்பீரம், பயங்கரம், நிரந்தரம் வாய்ந்த ஆதரவை அளிப்பதற்கே பயன்படுத்தியது: அது அவற்றை மனிதனுடைய ஐயப்பாட்டிற்கு இடம் தராத ஒரு மர்மத்திரையாக மற்றும் புதியன காண்போருக்கு எதிரான அறியாமைக் கவசமாக ஆக்குகிறது. அது மதத்தில் மனித உய்வு மற்றும் முழுமைக்கு ஒரு வழிவகையைக் கண்டதைப் பொறுத்தவரை, உடனே அதைக் கைப்பற்றி அதை இயந்திர மயமாக்கியது; மனிதனுடைய ஆன்மாவைப் பிடித்து அதைச் சமுதாய மத இயந்திரத்தின் சக்கரத்தில் பிணித்தது, ஆன்மீக சுதந்தரத்திற்கு பதிலாக அதன் மீது அதிகார நுகத்தடியைச் சுமத்தி, ஓர் இரும்புச் சிறையில் அடைத்தது. அது மனிதனுடைய மத வாழ்க்கையின் மீது ஒரு சர்ச்சை (church), குருமார் சம்பிரதாயத்தை மற்றும் ஒரு பேரெண்ணிக்கையான சடங்குகளைச் சுமத்தியது, மேலும் சமயக்கோட்பாடுகள் மற்றும் சமயக் கொள்கைகள் என்ற பெயரில் ஒரு காவல் நாய்க்கூட்டத்தை ஏற்படுத்தியது; கீழே இருக்கும் ஒரு மனித நீதிபதியால் பூவுலகச் சிறையில் அடைக்கப்படும் தண்டனை அல்லது மரண தண்டனையின் வலியால், ஒருவன் சமுதாயத்தின் சட்டங்களை ஒப்புக்கொண்டு அடிபணிய வேண்டியிருப்பதைப் போல, சமயக்கோட்பாடுகளை, அப்பால் உள்ள ஒரு நிலைபேறுடைய நீதிபதியின் நித்திய நரகத்தின் தண்டனையால், ஒருவன் ஏற்றுக்கொண்டாக மற்றும் அவற்றுக்கு அடிபணிந்தாக வேண்டும். மதத்தின் இந்தப் பொய்யான சமுதாயமாக்கலே. எப்பொழுதும் அது மன்பதைக்குப் புத்துயிரளிக்கத் தவறுவதன் முக்கியக் காரணமாக இருந்து வருகிறது.

ஏனென்றால், மதத்திற்கு அதனுடைய ஆன்மீக அம்சத்தை, அதனுடைய வெளிப்புற சடங்குகள் மற்றும் வடிவங்கள் மற்றும் நடைமுறைகளால் நசுக்கி உருக்குலைத்து, சம்பிரதாய ஆசாரமாக்குவதை விட வேறொன்றும் அதிகமான அழிவு பயப்பதாக இருக்கமுடியாது. மதத்தின் பழைய சமுதாயப் பயன்பாட்டின் பொய்ம்மை அதனுடைய விளைபயன்களால் காட்டப்படுகிறது. வரலாறு, பலதடவை மிகப்பெரிய மதப்பற்றார்வமும் கடவுள்பக்தியும், மிக இருண்ட அறியாமையுடன் பெருந்திரளான மனித வாழ்க்கையின் ஒரு குழம்பிய மிக இழிந்த கடைநிலை மற்றும் நீண்ட தேக்கத்துடனும், கேள்விகேட்பாரற்ற கொடுமை, அநியாயம், அடக்கியொடுக்கல் கூடிய ஆட்சியுடனும், அல்லது மேல்மட்டத்தில் ஏதோ ஓர் அறிவாற்றல் அல்லது அரை ஆன்மீக ஒளியால் சிறிதே தீண்டப்பட்டாலும் இன்னும் உயர்த்தப்படாத மிகச்சாதாரண, ஆன்மீக வேட்கையற்ற வாழ்வின் ஓர் அமைப்பு முறையுடனும் - இவையனைத்தின் முடிவாவதற்கான நிலையான மதத்தை ஒரு தன்னுரிமையுடன் ஆள்கிற பொய்ம்மை, தீமை மற்றும் அறியாமையின் மூலாதாரக்கூறு என்று அதற்கு எதிராக ஒரு மிகப்பரவலான புரட்சியுடனும் ஒத்து நிகழ்வதாக (வரலாறு) காட்டியுள்ளது. ஒரு சமுதாய மத அமைப்பு, அதன் சடங்குகள் மற்றும் வடிவங்கள் இவற்றை அளவுக்கு மீறி நுணுக்கமாக அனுசரித்தலுக்குக் கொடுக்கப்படும் தவறான முக்கியத்துவத்தின் காரணமாகவே, அவை அவற்றின் பொருளை மற்றும் உண்மையான மதம்தழுவிய மதிப்பை இழக்க ஆரம்பிக்கின்றன. தனிமனிதனுடைய அல்லது மனித இனத்தினுடைய எந்த ஓர் ஆன்மீக வளர்ச்சிக்கும் பதில் இந்தப் புற ஆசாரங்களே மதத்தின் விதிமுறையும் மற்றும் மிக முக்கியத்துவம் வாய்ந்த குறிக்கோளாகவும் ஆகிறது என்பதும் வேறொரு அறிகுறியாகும். மேலும் தனி மனிதன் சமுதாயத்திலிருந்து தன்னுடைய ஆன்மீக வளர்ச்சிக்கு இடம் காண்பதற்காகத் தப்பி ஓட வேண்டியிருக்கும்போது, அதுவும் கூட இந்தத் தோல்வியின் ஒரு மிகப்பெரிய அறிகுறியாகும்; மனித வாழ்க்கை செப்பமுறாத மனம், பிராணன் மற்றும் உடலுக்குக் கொடுக்கப்பட்டுவிட்டதை, ஆன்மீக சுதந்திரத்தின் இடம், வடிவங்களின் பிணைப்புக்களாலும் சர்ச் மற்றும் சாத்திரங்களாலும் அறியாமையின் ஏதோ ஒரு விதிமுறையாலும் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதைக் காணும்பொழுது, அவன் அவற்றிலிருந்து பிரிந்து சென்று, துறவி மடத்தில், மலையுச்சியில், குகையில், பாலையில் மற்றும் காட்டில் தன் ஆன்மீக வளர்ச்சியை நாடவேண்டியவனாகிறான்.

*(தொடரும்...)*

## அறிக்கைகள் (REPORTS)

**ஆரோவில்லில் நாய்க்குட்டி அல்லது பூனைக்குட்டியைக் கண்டால் என்ன செய்யவேண்டும்**
(What to Do If You Find a Puppy or Kitten in Auroville)

விருந்தினர் இல்லம் ஒன்று "தன் விருந்தினர்களின் பாதுகாப்பிற்காக" நாய்க்குட்டியை தூக்கி எறிந்த சம்பவம், ஆரோவில் தனது விலங்கு நலப் பொறுப்புகளை நிர்வகிப்பதில் எதிர்கொள்ளும் சவால்களை எடுத்துக்காட்டுகிறது. இந்த நடவடிக்கை ஒரு விருந்தினரை பெரிதும் வருத்தப்படுத்தியது. நாய்க்குட்டிகளை தூக்கி எறிவது நெறிமுறையற்றது மட்டுமல்ல, இந்தியச் சட்டத்தின் கீழ் சட்ட விரோதமானது, **விலங்குகள் வதை தடுப்புச் சட்டம், 1960-இன்** கீழ் தண்டனைக்குரியது என்பதை நினைவூட்டுகிறோம்.

நீங்கள் கவனக்குறைவாக தெருவில் ஒரு சிறிய நாய்க்குட்டி அல்லது பூனைக்குட்டியைக் கைவிட்டால், அது தானாகவே வாழ முடியாததால், மெதுவாக, வலிமிகுந்த மரணத்தை அனுபவித்து இறக்க நேரிடும். அவை வளர்ந்து, உங்கள் உதவியின்றி ஒரு சாதாரண தெருநாய் அல்லது பூனையாக வாழ முடியும் வரை சில மாதங்களுக்கு அவற்றிற்கு தயவுசெய்து உதவுங்கள்.

அனைத்து ஆரோவில்வாசிகளும் ஸ்ரீ அன்னையின் போதனைகளால் ஈர்க்கப்பட்டு, அனைத்து உயிரினங்களையும் அன்புடனும், மரியாதையுடனும், கருணையுடனும் நடத்துமாறு நாங்கள் ஊக்குவிக்கிறோம், ஏனெனில் நமது அன்பான நாய் நண்பர்களும் இந்த அற்புதமான எதிர்கால நகரத்தின் சக குடியிருப்பாளர்கள் ஆவர்.

**ஆரோவில் நாய்கள் காப்பகத்தின் தற்போதைய சவால்கள்**
ஆரோவில் நாய்கள் காப்பகம் அதன் திறனுக்கு அப்பாற்பட்டு செயல்படுகிறது. ஏற்கனவே இடிந்து விழும் உள்கட்டமைப்புடன் போராடி வரும் இந்த காப்பகம் சமீபத்திய புயலின்போது மேலும் சேதத்தை சந்தித்தது. இந்தச் சிரமங்கள் இருந்தபோதிலும், அடிப்படைச் செலவுகளுக்குத் தேவையான ரூ.3,00,000க்கு மிகக் குறைவாக ஆரோவில்லில் இருந்து கிடைக்கும் ரூ.50,000 என்ற சொற்பமான மாதாந்திர பட்ஜெட்டில் நாங்கள் சமாளித்து வருகிறோம். நிதி திரட்டுவதற்கும் ஆதரவை வழங்குவதற்கும் எங்களால் முடிந்த அனைத்தையும் செய்து கொண்டிருக்கும் வேளையில், நிலைமை மோசமாக உள்ளது. எங்களின் புதிய காப்பகத்தின் கட்டுமானத்தை அவசரமாக தொடங்க வேண்டும், ஆனால் நிதி மற்றும் கட்டிட அனுமதிபெறும் செயல்முறை கிட்டத்தட்ட ஒரு வருடமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஏவிஐ அமெரிக்காவின் ஆதரவிற்கு நன்றி, ஆகஸ்ட் மாதத்தில் நாங்கள் பெருமளவிலான தடுப்பூசி பிரச்சாரத்தை முடித்தோம். ரேபிஸ் நோய் உறுதிப்படுத்தப்பட்ட பல விலங்குகளுக்கு தொடர்ந்து இதுவரை 1,000 நாய்கள், நாய்க்குட்டிகள், பூனைகளுக்கு தடுப்பூசி போட்டுள்ளோம். விலங்கு நல வழிகாட்டுதலின் கீழ் குறைந்தது 1,000 நாய்களை (வாரத்திற்கு 20) கருத்தடை செய்வதே எங்களின் நீண்டகாலத் திட்டமாகும். இருப்பினும் எங்களது அடிப்படை அறுவைச்சிகிச்சை அறையை மேம்படுத்துதல் மற்றும் புதிய ஏபிசி அறுவைச்சிகிச்சை அறையை உருவாக்குதல் இந்த இலட்சிய திட்டங்கள் இரண்டிற்கும் நிதி ஆதாரம் (ரூ. 15 இலட்சம்) தேவை.

நாய்க்குட்டிப் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காணும் வரை, தெருநாய் அல்லது பூனைக்குட்டியை எதிர்கொண்டால், அனைத்து குடியிருப்பாளர்களும் பொறுப்புடனும் இரக்கத்துடனும் செயல்படுமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்:

1. **அதன் தாயை சுற்றித் தேடிப் பார்க்கவும்**, ஏனெனில் அதன் தாய் உணவைத் தேடி அருகில் எங்காவது சென்று இருக்கலாம். நாய்க்குட்டிகளின் தாய் அங்கு இருந்தால், அதன் நாய்க்குட்டிகள் அல்லது பூனைக்குட்டிகளைப் பராமரிக்க உணவும், பாதுகாப்பான சூழலையும் அதற்கு வழங்கவும்.
2. **தங்குமிடம் உருவாக்கவும்**, வெப்பம் மற்றும் பாதுகாப்பை வழங்க அட்டை பெட்டியை துணியால் மூடி எளிய மழைத்-தடுப்பு பெட்டியை உருவாக்கவும்.
3. **நாய்க்குட்டிகளுக்கு உணவளிக்கவும்.** பசும் பாலைத் தவிர்க்கவும், இது வயிற்றுப்போக்கை ஏற்படுத்தும். அதற்கு பதிலாக, மருந்தகத்தில் இருந்து பால் பவுடரை வாங்கி எப்போதும் பயன்படுத்தவும். நாய்க்குட்டியின் வயதைப் பொறுத்து ஒரு நாளைக்கு 2 முதல் 4 முறை உணவளிக்கவும். நீங்கள் ஓட்ஸ் அல்லது கேழ்வரகு மாவு, சிறிது பனை சர்க்கரை, பால் பவுடர் ஆகியவற்றைப் பயன்படுத்தி ஒரு கஞ்சி தயார் செய்யலாம். கொஞ்சம் பெரிய நாய்க்குட்டிகளுக்கு கோழிக் கறியுடன் சமைத்த அரிசி அல்லது கேழ்வரகு அல்லது எப்போதாவது வேகவைத்த உணவு கொடுக்கலாம். எப்போதும் அவற்றிற்கு சுத்தமான தண்ணீர் கிடைப்பதை உறுதி செய்து கொள்ளவும்.
4. **கால்நடை மருத்துவரின் உதவியை நாடுங்கள்** நாய்கள் அதிகமாக இருப்பதால், எங்களது காப்பகத்தில் அதிக நாய்க்குட்டிகளை எடுத்துக்கொள்ள முடியாது என்றாலும், காப்பகத்தில் மருந்துகள் கையிருப்பு இருக்கும் வரை இலவச கால்நடை சோதனைகளையும் தடுப்பூசிகளையும் (பார்வோ, ரேபிஸ்) வழங்குகிறது.

**கருத்தடை செய்வது ஏன் முக்கியம்?**
ஆரோவில்லின் தெருநாய்கள் பெருக்கத்தின் பிரச்சினைகளுக்கும், குடியிருப்பாளர்கள், விலங்குகள் இருவரது பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் பெருமளவிலான நாய்களுக்கு கருத்தடை செய்வதே ஒரே நீண்டகாலத் தீர்வு ஆகும். ஆரோவில் சமூகம், ஆரோவில் நிர்வாகம் இந்த முயற்சிக்கு முன்னுரிமை அளித்து, ஆரோவில் குடியிருப்பாளர்கள், பார்வையாளர்கள், விருந்தினர்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க கருத்தடை, தடுப்பூசிக்கு போதுமான நிதியை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**செயல்முறைப்படுத்துவதற்கான அழைப்பு**
மனிதர்கள், விலங்குகள் இருவருக்குமான சிறந்த ஆரோவில்லை உருவாக்கலாம். இரக்கமுள்ள நடவடிக்கை, சமூக ஆதரவு, தொடர்ச்சியான நிதி ஆகியவை பயனுள்ள தீர்வுகளுக்கு வழி வகுக்கும். நாய்க்குட்டிகளை தூக்கி எறிவது மனிதாபிமானம் அற்றது மட்டுமல்ல - அது சட்டவிரோதமானது. ஸ்ரீ அன்னையின் தொலைநோக்கத்திற்கு ஏற்ப அக்கறை, இரக்கம், ஒற்றுமை ஆகியவற்றின் உணர்வை பிரதிபலிக்கும் ஒரு சமூகத்தை வளர்ப்பதற்கு நாம் ஒன்றிணைந்து செயல்படுவோம். நீங்கள் எங்களது காப்பகத்திற்கு உதவிசெய்ய விரும்பினால் அல்லது மேலும் கேள்விகள் இருந்தால், தயவுசெய்து எங்கள் வலைத்தளமான www.aurovilledogshelter.com -ஐப் பார்வையிடவும். நன்றியுடன், *ஆரோவில் நாய்கள் காப்பகக் குழு*

**ஸ்ரீ அன்னையின் அருள்மொழிகள் – பலவீனங்கள் – துன்பம்**

**உலகம் துன்பங்களும் துயரங்களும் நிறைந்துள்ளது. இருக்கிற துன்பத்துடன் மேலும் துன்பத்தைச் சேர்க்க நாம் கராணமாக இருந்துவிடாதிருக்க முயல வேண்டும்.**
**மனிதனின் துன்பங்களுக்கு எல்லாம் ஒரே மருந்து இறைவனின் அன்பு.**

## த க வ ல் க ள்  ( I N F O R M A T I O N )

**இன்னர்பீயிங் தகவல்** (Announcement from Inner Being)

அன்பார்ந்த சமூகத்தவருக்கு,
நமது உள் ஆன்மாவைத் தேடல் ("Seeking our Inner Being") குழுவானது, "ஒரு ஆன்மீக கண்ணோட்டத்தில் நிர்வாக அமைப்பு" என்ற தலைப்பில் தமிழில் முதல் பகிர்வை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறது.

தயவுசெய்து இதைப் பாருங்கள்: https://innerbeing.world/2024/11/organisation-from-a-psychic-perspective-tamil-circle/

இந்த உரையாடல் ஆரோவில் ரேடியோவிலும் (https://www.aurovilleradiotv.org/ யூடியூபிலும் (https://youtu.be/XfY8RhVvvwI?si=XS7G5uMIA6xnTt41) கிடைக்கும்.

சமூகத்திற்கான இந்த ஒருங்கிணைக்கும் திட்டத்தில் நீங்கள் பங்கேற்க மற்றும்/அல்லது நன்கொடைத்தொகை அளிக்க விரும்பினால், தயவுசெய்து எழுதவும்: innerbeing.auroville@gmail.com

உங்கள் ஆர்வத்திற்கும் ஆதரவிற்கும் நன்றி.
*டான், இன்னர்பீயிங் அணிக்காக*

---

## அ றி வி ப் பு க ள் ( A n n o u n c e m e n t s )

AUROFILM

**மல்டி மீடியா சென்டர் அரங்கம் (எம்எம்சி, டவுன் ஹால்)**
(MULTI MEDIA CENTRE AUDITORIUM (MMC, Town Hall)

**நினைவூட்டல்: டிசம்பர் 20 வெள்ளிக்கிழமை இரவு 8:00 மணிக்கு,** *கிறிஸ்துமஸ் சிறப்பு நிகழ்ச்சி!*
"தி க்ரின்ச்" **(THE GRINCH) –** *இயக்கம்:* ஸ்காட் மோசியர், யாரோ செனி, யுனைடெட் ஸ்டேட்ஸ், 2018
தி க்ரிஞ்ச், டாக்டர் சியூஸின் தி க்ரின்ச் என்றும் அழைக்கப்படுகிறது, இது யுனிவர்சல் பிக்சர்ஸ் மற்றும் இலுமினேஷன் தயாரித்த ஒரு அமெரிக்க அனிமேஷன் கிறிஸ்துமஸ் திரைப்படமாகும். டாக்டர் சியூஸ் எழுதிய குழந்தைகள் புத்தகத்தை அடிப்படையாகக் கொண்டது- ஹவ் தி கிரின்ச் ஸ்டோல் கிறிஸ்துமஸ்!
*சுருக்கம்:* கிறிஸ்மஸ் ஈவ் அன்று அருகிலுள்ள நகரமான ஹூவில்லியின் வீடுகளில் இருந்து கிறிஸ்துமஸ் பரிசுகள் மற்றும் அலங்காரங்களை திருடி பொதுமக்களின் கிறிஸ்துமஸ் திட்டங்களை முறியடிக்க முயற்சிக்கும் க்ரின்ச் என்ற வெறித்தனமான, தனிமையான உயிரினத்தைப் பின்தொடர்கிறது. அதிசயமாக, கிறிஸ்மஸ் என்பது பணம் மற்றும் பரிசுகளைப் பற்றியது அல்ல என்பதை க்ரின்ச் உணர்ந்தார்.
வேடிக்கையான, மனதைக் கவரும் மற்றும் பார்வைக்கு பிரமிக்க வைக்கும், இது கிறிஸ்மஸின் உணர்வு மற்றும் நம்பிக்கையின் அசைக்க முடியாத சக்தியைப் பற்றிய உலகளாவிய கதை!
ஆங்கில மொழிப்படம், ஆங்கிலத் துணை வாசகங்களுடன். காலம்: *1 மணிநேரம் 25 நிமிடம்.* - எல்லா வயதினருக்கும்!
குறிப்பு: நன்கொடைத்தொகை வரவேற்கப்படுகின்றது! - கணக்கு எண் - ஆரோபிலிம் கலைக்ஷன். 252658.

**டிசம்பர் 27 வெள்ளிக்கிழமை இரவு 8:00 மணிக்கு, "சினிமா பாரடிசோ" ("CINEMA PARADISO")** (அசல் தலைப்பு: நுவோ சினிமா பாரடிசோ). *இயக்கம்* - கியூசெப் டோர்னடோர், இத்தாலி, 1988.
*நடிப்பு:* பிலிப் நொய்ரெட், ஜாக் பெர்ரின், அன்டோனெல்லா அட்டிலி, புபெல்லா மாகியோ, சால்வடோர் காசியோ
*சுருக்கம்:* ரோம், 1980களின் இறுதியில், சால்வடோர் தனது பழைய நண்பர் ஆல்ஃபிரடோவின் மரணத்தைப் பற்றி அறிந்து கொண்டார். இந்தச் செய்தியுடன், அவரது முழு குழந்தைப் பருவமும் மீண்டும் வெளிவருகிறது: சிசிலியில் உள்ள அவரது சொந்த கிராமம், அவர் டோட்டோ என்று அழைக்கப்பட்டார், மேலும் அவர் தனது ஓய்வு நேரத்தை தேவாலயத்திற்கும் (அவர் ஒரு பலிபீட சிறுவனாக இருந்த) மற்றும் ஆல்ஃபிரடோ ஆட்சி செய்த பாரிஷ் சினிமாவிற்கும் இடையில் பகிர்ந்து கொண்டார். ப்ரொஜெக்ஷனிஸ்ட், தான் காட்டிய திரைப்படங்கள் மூலம், வாழ்க்கையைப் பற்றி அவருக்குக் கற்றுக்கொடுத்து, சினிமாவின் மீதான தனது வாழ்நாள் நேசத்தைத் தொடங்கி, திரைப்படத் தயாரிப்பின் மர்மங்களை அவருக்கு வெளிப்படுத்தினார்... "*கியூசெப்பின் தலைசிறந்த படைப்பு இது. 7வது கலையின் முக்கிய நடிகராக இருக்கும் ஒரு கதையை சொல்வது மிகவும் கடினமாக இருந்தது, ஆனால், திரைப்படத் தயாரிப்பாளரின் திறமையை எண்ணிப் பார்க்காமல், இந்த காதல் கதையை பெரிய திரையில் உணர்ச்சியுடன் இணைத்து காட்டினார்".*

இது 11 பாஃப்டா விருதுகளுக்கு பரிந்துரைக்கப்பட்டு ஐந்து விருதுகளை வென்றது; சிறந்த நடிகர், சிறந்த அசல் திரைக்கதை *மற்றும் சிறந்த வெளிநாட்டு மொழித் திரைப்படம் உட்பட.*

*படத்தை டாக்டர் அலெக்சாண்டர் பெரேவர்ஸேவ் அறிமுகப்படுத்துகிறார்!*
*இத்தாலிய மொழிப்படம், ஆங்கிலத் துணைவாசகங்களுடன். கால அளவு: 2 மணிநேரம் 35 நிமிடம்.*

**ஸ்ரீ அன்னையின் அருள்மொழிகள் – பலவீனங்கள் – துன்பம்- சோம்பல்**

**இறைவனை நோக்கித் திரும்பு, எல்லாத் துன்பங்களும் மறைந்துபோம்.**

**வாழ்க்கையின் துக்கங்களை மேலெழுந்த வாரியாகப் பொருள் கொள்ளாதே.**
**உண்மையில் அவை மேலும் பெரிய நிறைவேற்றங்களுக்கு ஒரு வழி.**

**சோம்பல் - இது ஓர் ஆபத்தான நோய்.**

## <u>சென்டர் ஃபீல்ட் கிண்டர்கார்டன் தனது 40வது பிறந்தநாளைக் கொண்டாடுகிறது!</u>
(KINDERGARTEN CENTRE FIELD IS CELEBRATING ITS 40th BIRTHDAY!)




சென்டர் ஃபீல்ட் கிண்டர்கார்டன் ஓப்பன் அவுஸிற்கு தங்கள் அனைவரையும் அழைக்கின்றது: டிசம்பர் 20 வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணி முதல் 3 மணி வரை. மற்றும் டிசம்பர் 21 சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை.

இக்கண்காட்சியில் இந்த ஆண்டு குழந்தைகளின் படைப்புகள் மற்றும் கடந்த 40 ஆண்டுகால கிண்டர்கார்டனின் புகைப்படக் கண்காட்சி ஆகியவை காட்சிப்படுத்தப்படும்.

முன்னாள் மாணவர்கள் (மற்றும் அவர்களின் பெற்றோர்கள்) குறிப்பாக எங்கள் வருடாந்திர புகைப்பட ஆல்பங்களில் தங்களுடைய இளமைக்காலத்தில் அவர்களின் வகுப்புத் தோழர்களையும் மீண்டும் கண்டுபிடிப்பதற்கு வரவேற்கப்படுகிறார்கள் - மேலும் அவர்களின் சில ஆசிரியர்களையும் சந்திக்கவும்!

---

## <u>ஆரோ ஆர்ட்வோர்ல்ட்டில் இருந்து</u> (From Auro Artworld)

ஆரோ ஆர்ட் வோர்ல்ட் ஆரோவில்லில் உள்ள சென்டர் டி ஆர்ட் மல்டிமீடியா அறையில் 6 விரிவுரைகளின் தொடரை ஏற்பாடு செய்து வருகிறது. டாக்டர். கிறிஸ்டோப் க்ளுட்ச் நடத்தும் இந்த விரிவுரைகள், கலை, தத்துவம், ஆன்மீகம் ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்புகளை ஆராயும், கிழக்கு மற்றும் மேற்கத்திய மரபுகளை இணைப்பது, இருப்பு, உள்ளுணர்வு, படைப்பாற்றல் ஆகியவற்றின் நீடித்த கேள்விகளை விளக்குகிறது. இத்தொடர் ஒவ்வொரு மாதமும் முதல் செவ்வாய் அன்று நடைபெறுகிறது.

**மூன்றாவது விரிவுரை - 2024 டிசம்பர் 3 செவ்வாய் அன்று மாலை 5 மணிக்கு சென்டர் டி ஆர்ட் மல்டிமீடியா அறையில்.**
**Retinal Art and the Ruins of Representation (விழித்திரை கலை மற்றும் பிரதிநிதித்துவத்தின் இடிபாடுகள்): பிளாட்டோவின் குகையை மறுபரிசீலனை செய்தல் மற்றும் நாட்டியசாஸ்திரத்தில் ரசம் என்ற கருத்து - ஒரு இந்தோ-ஐரோப்பிய பார்வை.**

A. குமாரசாமி, மார்செல் டுச்சாம்ப் ஆகியோர் மேற்குலகில் ‘ஒரே’ விழித்திரைக் கலையை உருவாக்கி வருவதை விமர்சித்தனர். நாம் ஒரு பொருளைப் பார்க்கும்போது, விழித்திரையில் ஒரு படம் உருவாகிறது, இது மூளை மற்றும் உணர்வுடன் இணைக்கிறது. அந்த உருவத்தை கலை மற்றும் அதன் மாற்றும் சக்தி மூலம் குறிப்பிடலாம். மேற்கத்திய கலை படிப்படியாக சுருக்கம் மற்றும் பொருளிலிருந்து துண்டிக்கப்படுவதை நோக்கி நகர்ந்தாலும், நாட்டிய சாஸ்திரத்தில், ரசம் (சுவை) என்ற கருத்து எப்போதும் அக உலகின் வெளிப்பாட்டைக் குறிக்கிறது அத்துடன் ரசத்தின் பகிரப்பட்ட உள்ளுணர்வின் அடிப்படையில் ஒரு இணைப்பைக் குறிக்கிறது. இந்த மாறுபாட்டை பிளாட்டோவின் குகை உருவகத்தின் மூலம் விளக்கலாம்.

**வருங்கால விரிவுரைகள்**

2025 ஜனவரி 7, செவ்வாய் - Who is Seeing When Seeing (யார் பார்க்கும்போது பார்க்கிறார்கள்): கேன உபநிஷத் மற்றும் தர்க்கத்தின் உணர்வு.
2025 பிப்ரவரி 4, செவ்வாய் - Film is Thought (திரைப்படம் என்பது சிந்தனை): எச்.பெர்க்சனின் ஒளிப்பதிவு மற்றும் ஜே.எல். கோடார்ட் எப்படி பார்வையாளரை நிஜத்தில் அதிர்ச்சிக்கு உள்ளாக்குகிறார்.
2025 மார்ச்சு 4, செவ்வாய் - ரீடிங் டீலூஸ் இன் இந்தியா: பிளேன் ஆஃப் இம்மானன்ஸ், ரைசோம், பிரம்மன் மற்றும் ஏஜ உடனான உரையாடல்கள். *சமர்ப்பித்தவர் - கிருஷ்ணா*

---



## <u>ஆரோவில் இந்தியப் பெவிலியன், பாரத் நிவாஸ், ஸ்ரீ அரவிந்தர் அரங்கம் வழங்கும்</u>

**பாரத் கி பான்சூரி - மரபுகளைக் கடந்து ஒரு பயணம்**

தென்னிந்திய பாணியில் இசைக்கப்படும் இந்துஸ்தானி மற்றும் கர்நாடக மரபுகள் இரண்டிலும் பொதுவான ராகங்களை ஆராயும் நிகழ்ச்சி.

**புல்லாங்குழல் - ஸ்ரீகர் சதீஷ். இளம் இந்திய கலாச்சாரக் கலைத் தூதராக அங்கீகரிக்கப்பட்டார்.**
**வயலின் - நீரஜ் சந்திரசேகர் மிருதங்கம் - நரேன் புல்லேலா**
**22 டிசம்பர் 2024, இரவு 07:00 மணி. இடம்: ஸ்ரீ அரவிந்தர் அரங்கம், பாரத் நிவாஸ், ஆரோவில்**

புக்மை ஷோவில் பதிவு செய்யுங்கள்.
*விசாரணை தொடர்பு: கிருஷ்ணா +91 97878 80211. மெயின் கேட்டிற்கு வெளியே வாகனம் நிறுத்தும் வசதி உள்ளது.*

---

## <u>பாரத் நிவாஸின் அறிவிப்பு</u> (Announcement From Bharat Nivas)

அன்பார்ந்த ஆரோவில்வாசிகளுக்கு, பாரத் நிவாஸின் நல்வாழ்த்துக்கள்!
**ஆரோவில் மார்கழித் திருவிழா** 04.01.2025 **முதல் ஜனவரி** 13.01.2025 **வரை நடைபெறும்** என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம்.
செழுமையான கலாச்சார அனுபவத்தைப் பெற ஸ்ரீ அரவிந்தர் அரங்கம்/சாச்சுவில் எங்களுடன் இணைய தங்களை அன்புடன் அழைக்கிறோம்.
ஆரோவில்வாசிகள்/புதிதாய்ச்சேர்ந்தவர்கள்/தன்னார்வலர்கள், ஆரோவில் விருந்தினர் இல்லங்களில் வசிக்கும் **விருந்தினர்களுக்கு நுழைவு இலவசம். சுமூகமான ஒருங்கிணைப்பை எளிதாக்குவதற்கு நீங்கள் அனைவரும் மாலை** 6:45 மணிக்குள் வருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.
நம்பிக்கையுடனும் அன்புடனும், ஸ்ரீ அன்னையின் சேவையில். *ஜனமேஜய் மொஹந்தி - பாரத் நிவாஸ் அறங்காவலர்*

## எஃப்ஏஎம்சியின் அறிவிப்பு (Announcement From FAMC)

*ஒழுக்கம் இன்றி பெரிய படைப்பு எதுவும் சாத்தியமில்லை - தனிமனித ஒழுக்கம், குழு ஒழுக்கம், தெய்வீகத்தை நோக்கிய ஒழுக்கம்."*
*-ஸ்ரீ அன்னை, 16 .09.1968*

அன்பார்ந்த குடியிருப்புவாசிகளே,
ஆரோவில்லில் வசிப்பவர்கள் தொடர்பான அனைத்து விஷயங்களையும் கையாள்வதற்காக எஃப்ஏஎம்சி தனது சேவையின் கீழ் "மனித வளச் சேவைகள்" என்ற துணைத் துறையை நிறுவியுள்ளது. இந்த அணியில் அந்தீம், ஜோயல், முரியல், ராஜா, சிந்துஜா, சுரேஷ் ஆகியோர் உள்ளனர்.

குறிப்பாக, ஆனால் பிரத்தியேகமாக அல்ல, மனித வளச் சேவை (எச்ஆர்எஸ்) பின்வரும் பணிகளை மேற்கொள்ளும்:

1. குடியிருப்பாளர்கள் ஆரோவில்லில் நிரந்தரமாக வசிப்பதை உறுதி செய்தல், இரண்டு வாரங்கள் அல்லது அதற்கும் குறைவாக ஆரோவில்லை விட்டு வெளியூர் செல்லும் குடியிருப்பாளர்களிடம் இருந்து அவர்கள் புறப்படும் நாள், திரும்பி வரும் நாள் குறித்த தகவலைப் பெறுதல், இரண்டு வாரங்களுக்கு மேல் ஆரோவில்லை விட்டு வெளியூர் செல்லும் குடியிருப்பாளர்கள் வெளியூர் செல்வதற்கான வேண்டுகோள்களைப் பெற்று ஒப்புதல் அளித்தல்.
2. குடியிருப்பாளர்கள் ஆரோவில்லில் முழுநேர வேலை செய்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்துதல், ஆரோவில்லிற்கு வெளியே வணிக நடவடிக்கைகளில் ஈடுபடும் குடியிருப்பாளர்களைத் தொடர்பு கொண்டு அழைப்பு விடுத்தல், அத்தகைய குடியிருப்பாளர்கள் தனது தனிப்பட்ட நடவடிக்கைகளைத் தொடர விரும்பினால், ஆரோவில்லுடன் இணைவதற்கான நியாயமான விருப்பங்களை வழங்குவதை உறுதிசெய்தல்.
3. ஆரோவில் சொத்தில் ஏழு நாட்களுக்கு மேல் வீட்டு விருந்தினர்களை தங்க வைக்க விரும்பும் குடியிருப்பாளர்களிடம் இருந்து விண்ணப்பங்களைப் பெற்று செயல்படுத்துதல்.
4. நிரந்தர விருந்தினரை" தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளில் அதாவது மனைவி, அல்லது வயதான/பலவீனமான பெற்றோர்கள்/நெருக்கமான குடும்ப உறுப்பினர்கள் தங்க வைத்துக்கொள்ள விரும்பும் குடியிருப்பாளர்களிடம் இருந்து விண்ணப்பங்களைப் பெற்று செயலாக்கம் செய்தல்.
5. நிர்வாகப் பேரவையால் தீர்மானிக்கப்படும் குறிப்பிட்ட கால இடைவெளியில் அனைத்து குடியிருப்பாளர்களுக்கும் ஆன்மீகம் மற்றும் பருப்பொருள் சார்ந்த புத்துணர்ச்சி திட்டத்தை வடிவமைத்து ஏற்பாடு செய்தல்.

மேலே குறிப்பிட்டுள்ள அனைத்திற்கும், எச்ஆர்எஸ் உங்களுடன் கலந்துரையாட கூட்டத்திற்கு அழைக்கலாம் அல்லது உங்கள் குடியிருப்பு அல்லது பணியிடத்திற்கு வரலாம். அனைத்து குடியிருப்பாளர்களும் தங்களது முழு ஒத்துழைப்பை வழங்கவும், வெளிப்படைத்தன்மை, ஆரோவில்லின் முன்னேற்றத்திற்கான கூட்டு முயற்சியாக இந்த முயற்சியை அணுகுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேலே பட்டியலிடப்பட்டுள்ள கருத்துகளைத் தவிர, மனித வளச் சேவையானது குடியிருப்பாளர்கள் பணியாற்றுவதற்கான வேலை வாய்ப்புகள் குறித்த தரவுத்தளத்தை உருவாக்கும். அத்தகைய தரவுத்தளம் தயாரானதும், அது ஆரோவில் இணையதளத்தில் பதிவேற்றப்படும்.
ஆரோவில்லானது துணிவுடன் எதிர்கால நன்முடிவுகளை நோக்கித் துடிப்புடன் முகிழ்த்து எழும்,
*ஸ்ரீ அன்னையின் சேவையில், எஃப்ஏஎம்சி*

---




## ஆரோவில் பேக்கரி ஞாயிற்றுக்கிழமைகளில் திறக்கும் நேரம் பற்றிய தகவல்
(AV Bakery Sunday Opening Hours Update)

அன்பார்ந்த சமூகத்தவருக்கு,
ஆரோவில் பேக்கரி & கஃபே இப்போது **ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 1 மணி வரை** குரோசான்ஸ், கேக்குகள் மற்றும் பிற பேக்கரி பொருட்களுக்காக திறந்திருக்கும். கஃபே அதன் வழக்கமான மெனுவை வழங்கும். அன்பான வாழ்த்துக்கள், *ஆரோவில் பேக்கரி & கஃபே குழு*

---

## ஆரோவில் பள்ளிகளுக்கு ஆதரவு அளிக்கவும் (Support Auroville Schools)

அன்பார்ந்த சமூகத்தவருக்கு,
நமது ஆரோவில் பள்ளிகள் அவற்றின் இயக்கச் செலவுகளை ஈடுகட்டவும், நம் குழந்தைகளுக்கு தரமான கல்வியைத் தொடர்ந்து வழங்கவும் நிதி திரட்டி வருகின்றன. இதில் பங்கேற்கும் பள்ளிகள்:
நந்தனம் கிண்டர்கார்டன், டிரான்சிஷன் ஸ்கூல், பியுச்சர் ஸ்கூல், லாஸ்ட் ஸ்கூல், தீபனம், ஃபிரி கிரஷ், கிண்டர்கார்டன், மற்றும் பல.

ஏவிஐஐ யுஎஸ்ஏ நிதி திரட்டும் பக்கத்தில் பட்டியலிடப்பட்டுள்ள அனைத்து பள்ளிகளையும் நீங்கள் காணலாம்: [https://aviusa.org/av-schools/](https://aviusa.org/av-schools/).

இணையதளத்தை அணுகுவதில் உங்களுக்கு ஏதேனும் சிரமம் இருந்தால், உதவிக்கு +91 75980 87947 -ஐத் தொடர்பு கொள்ளவும்.

கற்றல், படைப்பாற்றல் மற்றும் வளர்ச்சியை வளர்க்கும் இந்தப் பள்ளிகளை நிலைநிறுத்துவதில் உங்கள் ஆதரவு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும். தயவுசெய்து நன்கொடை அளித்து நம் சமூகத்தை ஆதரிக்க உதவுங்கள்.
உங்கள் தாராளகுணத்திற்கு நன்றி!

## ஸ்ரீ அன்னையின் அருள்மொழிகள் – பலவீனங்கள் – களைப்பு

**களைப்பு முன்னேற வேண்டும் என்ற மன உறுதி இல்லை என்பதைக் காட்டுகிறது. நீ களைப்பையோ உடற் சோர்வையோ உணர்ந்தால் உன்னிடம் முன்னேற வேண்டும் என்ற மன உறுதி இல்லை என்பதற்கு அது அடையாளமாகும்.**
**எப்பொழுதும் நெருப்பு உன்னிடத்தில் எரிந்து கொண்டிருக்கிறது.**



**ஆரோவில் இந்தியப் பெவிலியன், பாரத நிவாஸ்**

பாரத் நிவாஸ் மற்றும் ஆரோதன் பாண்டிச்சேரி இணைந்து வழங்கும்

**இந்திரயுத் மஜூம்தர் வழங்கும் சரோத் இசை - தியான்**
**19 டிசம்பர் 2024, இரவு 07:30 மணி, சாச்சு, பாரத் நிவாஸ், ஆரோவில்**

*உலகம் முழுவதும் மிகவும் விரும்பப்படும் சரோத் இசைக்கலைஞரின் திறமையை கண்டுகளியுங்கள். இன்னிசை மற்றும் கலைநயம் கொண்ட ஒரு மறக்க முடியாத மாலைப்பொழுதில் எங்களுடன் சேருங்கள்!*

அனைவரும் வருக...

*விசாரணை தொடர்பு: கிருஷ்ணா +91 97878 80211. மெயின் கேட்டிற்கு வெளியே வாகனம் நிறுத்தும் வசதி உள்ளது.*

---






**ஆரோவில் இந்தியப் பெவிலியன், பாரத நிவாஸ் வழங்கும்**

**"Blossoms like a flower" - ஓவியக் கண்காட்சி - பிபின் ஆச்சார்யா**

*தெய்வீகத்திற்கு அர்ப்பணிக்கும் மலர் போல வாழ்க்கை மலர வேண்டும் - ஸ்ரீ அன்னை*

**22 டிசம்பர் 2024, கலாகேந்திரா, பாரத் நிவாஸ், ஆரோவில்**
காலை 09:00 முதல் மாலை 4:30 மணி வரை.
அனைவரும் வருக...

22 டிசம்பர் 2024 அன்று மாலை 3:00 மணிக்கு, இயற்கையின் அழகையும் படைப்பாற்றலையும் கொண்டாடும் வசீகரிக்கும் ஓவியக் கண்காட்சியான *ப்ளாசம் லைக் ஃப்ளவர்ஸ்* திறப்பு விழாவிற்கு எங்களுடன் இணையுங்கள்.
*விசாரணை தொடர்பு: கிருஷ்ணா +91 97878 80211. மெயின் கேட்டிற்கு வெளியே வாகனம் நிறுத்தும் வசதி உள்ளது.*

---

**யூனிட்-டு-யூனிட் நன்கொடைகள் மற்றும் பரிமாற்றங்கள் பற்றிய தகவல் - ஏவி யூனிட்டி ஃபண்ட் அறிவிப்பு**
(Update on Unit-to-Unit Donations and Transfers - AV Unity Fund Announcement)

**யூனிட்-டு-யூனிட் நன்கொடைகள்**

ஆரோவில் நிறுவனங்களுக்கு இடையேயான அனைத்துப் பணப் பரிமாற்றங்களும், தனிநபர்கள் தவிர, பொருட்கள் அல்லது சேவைகள் பரிமாற்றம் எதுவும் சம்பந்தப்படாத நிலையில், ஜிஎஸ்டி தாக்கங்களைத் தவிர்க்க, யூனிட்டி ஃபண்ட் கணக்கு எண். 240008 வழியாகச் செல்ல வேண்டும். இந்த பரிமாற்றத்தை அனுப்புபவர் மற்றும் பெறுபவர் இருவரும் தங்கள் கணக்குப் புத்தகங்களில் "இன்டர் யூனிட் டிரான்ஸ்ஃபர்" (Inter Unit Transfer) எனக் கணக்குப் பதிவு செய்யலாம்.

இருப்பினும், இன்வாய்ஸ்கள் செய்ய வேண்டிய பொருட்கள் அல்லது சேவைகளுக்கான அனைத்து யூனிட் கட்டணங்களும் வழக்கம் போல் நேரடியாக நிதிச் சேவை மூலம் செய்யப்படும். அதற்கு, ஜிஎஸ்டி இருக்கலாம். இது குறித்து உங்கள் ஆடிட்டரை அணுகவும்.

டிஜி/டிஎல் (DG/DL)க்கு மேற்கூறிய மாற்றங்கள் மாஸ் புல்லட்டின் மூலம் அனுப்பப்பட்டு ஆரோநெட் மற்றும் நியுஸ் அண்ட் நோட்ஸில் வெளியிடப்பட்டன. இருப்பினும், டிசம்பரில், அதிக எண்ணிக்கையிலான யூனிட்கள் மற்ற நிறுவனங்களின் வசூல் கணக்குகளுக்கு தொடர்ந்து மாற்றப்பட்டது கவனிக்கப்பட்டது.
அத்தகைய பரிமாற்றங்கள் அனைத்தும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

முடிந்தவரை சீக்கிரம் நிதிச்சேவை அலுவலகத்திற்குச் சென்று, அடுத்த பரிமாற்றம் செய்யப்படுவதற்கு முன், அனைத்து தொடர்ச்சியான பரிமாற்ற வழிமுறைகளும் திருத்தப்பட வேண்டும்.
நிதிச்சேவையில் ஒரு முறை பரிமாற்றங்களும் மாற்றப்பட வேண்டும்.
இந்தப் பரிவர்த்தனைகளுக்கு யூனிட்டி ஃபண்ட் கணக்கு எண். 240008-ஐப் பயன்படுத்தவும்.
*ஆரோவில் யூனிட்டி ஃபண்ட்-ஆல் சமர்ப்பிக்கப்பட்டது.* avunityfund@auroville.org.in

---



**தி ஆரோவில் ஹார்மோனிஸ் - பெண்கள் கொயர் (பாடகர் குழு)**
(The Auroville Harmonies - Women Choir)

**டவுன் ஹால், பிடிடிசி, பார்வையாளர்கள் மையம்** என வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு நாடுகளின் **கிறிஸ்துமஸ் கரோல்களைப் பாடுகிறார்கள்...**

**டிசம்பர் 21 சனிக்கிழமை காலை 10:30 மணி முதல் மதியம் 1:00 மணி வரை.**